# இந்துசாதனம்.

ஸ்தாபிதம் (1889)

# THE HINDU ORGAN.

## குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எவனைத்தானு கல்லவைை கேட்க அவனைத்தானும், மான்ற பெருமை தரும்."

| பத்திரிகை கிரயம். | |
|---|---|
| (முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.) | |
| யாழ்ப்பாணப்பட்டினம்: | ரூ. ௨-௨-௦. |
| வெளியூர், இந்தியா: | ரூ. ௩-௦-௦. |
| தொலைப்பகுதி: | ரூ. ௪-௦-௦. |
| தனிப்பிரதி | சதம் -௦௫. |

| விளம்பர விகிதம். | | ரூ. ச. |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ௬-௦௦. |
| ,, | அரைக்கலம் | ௪-௦௦. |
| ,, | கால்கலம் | ௨-௦௦. |
| ,, | ஒரு அங்குலம் | -௫௦. |
| அடுத்தமுறைகட்கு விகிதங்களில் குறைவாகும். | | |

புத்தகம் - ௩0 | யாழ்ப்பாணம்—காலயுக்தி௵ மாசி௴ ௨௮௳; ௧௯௧௯-ம்௵ மார்ச்சு௴ ௧௨௳. | இலக்கம்—௩௪


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா அளர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்த விநாயகன்ற னடிவணக்கம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


## விளம்பரம்.

விலை சகாயத்திற்கும்
ஜவுளி நாணயத்திற்கும்
பேர்பெற்ற கம்பனி எது?
**மதுரை மு. க.**
**இராமையர் அன் சன்ஸ்.**

எங்கள் ஜவுளிக்கம்பனியில் சுமார் ௫0 வருஷ காலமாக எங்கள் நேர் பார்வையின்பேரில் கைதேர்ந்த நெசவுகாரர்களை க்கொண்டு பலதேசங்களிலுமுள்ள வியாபாரிகளுக்கும் மற்றும் குடித்தனகாரர்களுக்கும் ஏராளமான திணுசுகள் தயார் செய்து கொடுத்துக்கொண்டும், ஏராளமான திணுசுகள் கைவசம் வைத்துக்கொண்டும், விரும்பி எழுதும் திணுசுகளை யாதொரு பிசகின்றி அனுப்பியும் விசேஷ வியாபாரம் செய்து வருகிறோம் என்பது உலகம் பூரா அறிந்த விஷயம். தவிரத் தற்கால நாகரீகத்திற்குத் தக்கபடி பலவூர் அநேகநூதன திணுசுகளும் வரவழைத்து ஸ்டாக்கில் வைத்துக்கொண்டு சொற்ப லாபத்திற்கு நேரிலும், வி பி யிலும் அனுப்பிக்கொண்டு வருகிறோம். அசலூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து வி பி யில் அனுப்புவோம்.

F. M S. பெடரேடெட்மலாய்நாடுகளில் இருப்பவர்கள் ஆர்டருடன் முற்பணம் அனுப்பவேண்டும் அல்லது பாங்க் மூலமாய் பெற்றுக்கொள்ளலாம் சிங்கப்பூர், பினங்கு என்னும் இடங்களுக்கும் வி பி யில் அனுப்புவோம்.

எங்கள் ஜவுளி விபரம் விலை யாப்தா (Catalogue.) இனாமாக எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

மு. க. ராமய்யர் அன் சன்ஸ்
சுதேசி ஜவுளி வியாபாரிகள்.
மேலைக் கோபுரவீதி
மதுரை.

## சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனுல் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபரகபஸ்பம், லங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு நெடுவருஷத்தால் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இறுத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைஇறுத்தலுக்கு ரூபா ௧0. கால் இறுத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினுல் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
இல. 96 முதல் மருதானை, கொழும்பு.

## புதிய ஜவுளி நூல் கம்பெனி.

நயம் திணிசுகள். சொற்பலாபம். விலை சரசம்.

ஐயா,

அடியிற்கண்ட நம்முடைய ஜவுளிநூல் கம்பெனியில் பற்பல ஊர்களிலிருந்து உற்பத்தியாகி வருகின்ற தற்காலத்திற்கேற்ற நாகரீகமான திணிசுகளாயும் விலைகள்சரசமாயும் அனுப்பிக்கொண்டுவருகிறோம்.

ஹோம்ரூல் காப்பிக் கலரும், கறுப்பு சிவப்பு 1-ம் நம். 60×40-ம் நம்பர் நூல்களில் கரை 1இஞ்சு வைத்து, பச்சைக் கரை சிகப்புக் கரை கறுப்புக்கரைகள் வைத்து முந்தியில் 4 அல்லது 5 இஞ்சு பட்டுப்போட்ட 6 முழச சேலை 1-க்கு ரூபா 7-8-0. டை மாதிரியில் 44×40 நம்பர் நூலிற் போட்ட 16முழச்சேலை 1-க்கு ரூபா 7-0-0. டை மாதிரி 40×32 நம்பர் நூலிற் போட்ட 16 முழச் சேலை 1-க்கு ரூபா 6-8-0. இந்த விலைகளில் காப்பிக் கலர்ச்சேலையானுலும் பிளேன் கறுப்புச்சேலையானுலும் ஒரேவிதமான திணிசுகள் புதிதாய் உற்பத்திசெய்திருப்பதால் விலைகள் கண்டு எழுதியிருக்கிறோம். இன்னும் மற்ற பனாரிஸ், பெங்களூர், கோயம்புத்தூர், சேலம், ஆரணி, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சினுப்பள்ளி, உள்ளூர், இன்னும் அநேக ஊர்களிலிருந்து ஏராளமாய்த் தருவித்து வைத்திருக்கிறோம். தாங்களும் வேண்டும் திணிசுகளுக்கு 100-க்கு 10 வீதம் அட்வான்ஸ் அனுப்பினுல் திணிசுகள் அனுப்பப்படும்.

தாங்கள் நமது கம்பெனியில் ஒருமுறை திணிசுகள் தருவித்துப்பார்த்தால் எப்போதும் நம்முடைய கம்பனிக்கே ஆடர்செய்வீர்கள். தவிர வேறு எவ்விடத்திலிருந்துந் தருவிக்கமாட்டீர்கள்.

தவிர 10-ம் நம்பர், 20-ம் நம்பர் நூல்களில் நாட்டு கெட்டி சிகப்பு 1-ம் தரம், 2-ம் தரம், 3-ம் தரம் நூல்களில் வர்ணம் தந்து, கண்ணல் சாயத்தில் 5 ருத்தல் கட்டுகளும், சீமைக் கெட்டிச் சாயம் கறுப்பு மாதிரி 10-ம் நம்பர் 20-ம் நம்பர் 30-ம் நம்பர் 40-ம் நம்பர் நூல்களில் கெட்டிச் சாயமுள்ள 5 ருத்தல் பெட்டிகளும் விலைகள் நயமாயும் இழைப்புக்கு தெரிவலாமலும் நயமான நூல்கள் தயாராகின்றன. தேவையுள்ளவர்கள் வி. பி. மூலம் ஆடர் செய்துகொள்ள வேண்டியது.

N.B. ஆடர்கள் உடனே தவறின்றி அனுப்பப்படும், வி. பி. சார்ஸ் பிரத்தியேகம்.

இப்படிக்கு,

M. S. RamaswamyIyer & Company,
Cloth & Yarn Merchants,
Singara Topu Street,
26-10-18. Madura, S. India.

இனும்! இனும்!! இனும்!!!

உயர்ந்த
மதுரை புட்டாச் சேலை.

16 முழ நீளம் 2½ முழ அகலமுள்ளது. சாயத்திற்கு உத்தரவாதம். அதில் அநேக விதமான புட்டாக்கள் போட்ட பல நிறங்களுண்டு. தற்கால நாகரிகத்திற்குப் பொருந்திய நாணயமான நல்லசேலை. சேலை 1 வாங்குவோருக்கு எலெக்டிரிக் பொன் மோதிரம் ஒன்று பரிசு அளிக்கப்படும். விலை ரூபா 4-0-0. ஒரேமுறையில் மூன்று சேலைவாங்கினுல் வி.பி சார்ஜ் இல்லை.



சான்டோ வாச்சு அன்கம்பனி,
சௌகார்பேட்டை,
மதராஸ்.

## புதுமாதிரியான ஷோட்டுகள்.

எல்லோருக்கும் அவசியமானது
ஒவ்வொருவரும் வாங்கத் தவறாதீர்கள்.
36 இஞ்சு நீளம்.

இது நேர்த்தியான இங்கிலீஷ் டுவிலில் கைதேர்ந்த தையற்காரரைக்கொண்டு தற்கால வாஷன் படிக்கு சிப்பிப் பொத்தான்கள் வைத்துத் தைத்த ஷோர்ட் 1-க்கு ரூபா 2; டசன் ரூபா 23. கீர்த்திவாய்ந்த கார்கிடுவில்ஷோர்ட்டுகள். இது அற்புதமான கார்கிகலறில் வெகுநேர்த்தியாய்த் தைத்திருக்கும். ஒருமுறை வாங்கினுல் மறுமுறை வேறெந்த ஷோர்ட்டும் வாங்கப் பிரியமிராது. ஷோர்ட் ஒன்றுக்கு ரூபா 2-8-0; டசன் ரூபா 29. கழுத்தின் சுற்றளவு தெரியப்படுத்தவும்.



மதுரை மீனுட்சியம்மன்
அழகிய புட்டாச் சேலை.

விலை ரூபா 4-0-0. விலை ரூபா 4-0-0.

16முழம் நீளம், 2½முழம்அகலம். சாயத்திற்கு உத்தரவாதம். தற்காலத்துக்குத் தகுந்த நாணயமான நல்லசேலை. இதில் பலவித புட்டாக்கள் போட்ட பல கலர்களிலுண்டு ஓர்முறை வரவழைக்க உண்மை புலப்படும். ஒரேமுறையில் நாலு சேலை வாங்குபவர்களுக்கு வி. பி. சார்ஜ் இனும். சாம்பின் அனுப்ப முடியாது.



இனும்! வி.பி. சார்ஜ் இனும்!

பம்பாய் இமிடேஷன் பட்டுப் புடைவை.

பார்வைக்கு வெகு நேர்த்தியாயும் அழகாயும் நாணயமாயும்இருக்கும். இதில் பலவித கலர்களில் பலவித பூக்கள் போட்ட தரம் உண்டு. தற்காலத்துக்குத்தகுந்தசேலை. பிரபுக்களும் ஏழைகளும உடுத்தக்கூடியது. ஓர் முறை வரவழைக்க உண்மை விளங்கும்.



8 கஜம் 7-8-0. 9 கஜம் 8½ ரூபா.

வி. சரஸ்வதிபாய் அன்ரு கம்பெனி,
10, வைத்தியநாதமுதலி தெரு,
சௌகார்பேட்டை, மதிராஸ்.


## தேவை.

வட்டுக்கோட்டை கிழக்குச் சைவ வித்தியாசாலையில் தமிழ்ப் படிப்பித்தற்கு இரண்டாம் வகுப்புத் தராதலம் பெற்ற ஒரு உபாத்தியாயரும் மூன்ரும் வகுப்புத் தராதலம் பெற்ற உபாத்தியாயரும் தேவை. சேர விரும்புவோர் எம்மை நேரிற் காணவும்.

A. தில்லைநாதர், மனேசர்.

## விளம்பரம்.

ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலையில் தையல் பயிற்றத்தக்க ஓர் உபாத்தியாயினி தேவை. சம்பளம் முதலியவற்றைக்குறித்து எனக்கெழுதியறிக.

இங்ஙனம்,
ப. சண்முகம்,
காரைதீவு மேற்கு மானேஜர்.


## நேத்திரரோகிகட்கோரறிவித்தல்.

கண்களிலுண்டாகும் எவ்வித நோய்களுக்கும் எற்க ஆயுள்வேதமுறைப்படி என்னுலாக்கப்பட்ட முதற்றரமான தைலங்கள், ஒளஷதங்கள் முதலியனகொண்டு நேத்திரவைத்தியம்நடத்திவருகின்றேன். காலை8மணிமுதல் 10மணிவரையும்எனது மருந்துச்சாலையில் நோயாளர் சிகிச்சைபெறுவர்

இங்ஙனம்,
காயன்மார்கட்டு, S. சதாசிவம்பிள்ளை.

## விளம்பரம்.

தேவாலயங்களுக்கு உபயோகமான திறம் பட்டுக்குடைகள், ஆலவட்டம், கொடி, சுருட்டி, ஜாலர், மகரதோரணம், காவடிசகலாத்து, முதலானவைகள் இந்தியாவில் சித்திரவேலைக்காறர்களால் செய்யப்பட்டு நமது சாப்பில் சகாயமான கிரயத்திற்கு கொடுக்கவிருக்கின்றன. இன்னும் அவர் அவர்கள் கேட்கும் ஓடர்களுக்குத் தக்கமாதிரிதயாரித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

மு. நாகலிங்கம் அன் சன்ஸ்
பறங்கித் தெரு,
யாழ்ப்பாணம்.

## ஜவுளி விளம்பரம்.

M. R. PERUMALIER,
MANUFACTURER OF SWADESI CLOTHS,
West Tower Street, Madura,
(S. INDIA.)

எமது தொழிற் சாலையில் தற்கால நாகரீகத்திற்கு ஏற்ற விதமாக அநேக நூதன திணுசுகள் 100, 150, 200-ம் நம்பர் நூலில் ஜரிகையிலும், சாதாவிலும், வேஷ்டிகள், சால்வைகள், சவுக்கங்களும், இன்னும பலவித இங்கிலீஸ் கலர்களில், ஜரிகைச் சேலை, சாதா சேலை, தாவணி, மதுரை சுங்கடி புடவை, சித்தாடை, ரவிக்கை வகையராக்கள், ஜரிகையிலும், சாதாவிலும் தயார் செய்துவைத்தும், காசி (பெனாரிஸ்), பம்பாய், பூனா. சூரத், கல்கத்தா, காஷ்மீர், காக்கிநாடு, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, நெல்லூர், உப்பாடை, துயிலி, மலையாளம் முதலிய இடங்களில் தயாராகும் பட்டுச் சேலை, பனுக்காச் சேலை வகையரா சகலதிணுசுகளும் யோக்கத்தில் ஏராளமாய் வரவழைத்துவைத்து வியாபாரிகளுக்கும் மற்றும் சொந்தப் பாவிப்புக் காரர்களுக்கும் மொத்தமாகவும் சில்லறையிலும் சகாய விலைக்கு நேரில் கொடுத்தும் தபால் மூலமாய் வரும் கடிதங்களுக்கு போஸ்டு பார்சலாக சரக்கு அனுப்பிக்கொண்டு வருகிறோம்.

(1) திருப்தியில்லாத சரக்குகளை திருப்பப் பெற்றுக்கொண்டு வேறுசோரும் சரக்கை மாற்றிக் கொடுக்க முடியும்.

(2) சகல ஆடரும் வி. பி. மூலமாக சரக்கு அனுப்பப்படும்.

(3) சிங்கப்பூர் பினங்கு மலாக்கா முதலிய (S S) ஸ்ட்ரெயிட் செற்டில் மெண்டு நாடுகளுக்கும் வி. பி. யிலும் அனுப்பக்கூடும்.

(4) கோலாலம்பூர் சிலாங்கூர் முதலிய (F M S) பெடரேட்டெட் மலாய் நாடுகளுக்கும் தென்ஆபிரிக்கா மோரிஸ் முதலிய வெளிநாடுகளுக்கும் வி. பி. சட்டம் இல்லாததினுல் போஸ்டல் ஆர்டர் மூலமாகவாவது மணியார்டர் மூலமாகவாவது பணம் அனுப்பவேண்டும். பணம் வந்த பிறகு சரக்கு அனுப்பப்படும்.

(5) முற்பணம்அனுப்ப சவுகரியப்படாதவர்கள் சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா முதலிய (S S)ஐச் சேர்ந்த போஸ்மாஸ்டர்கள்பேருக்கு பார்சல்களை அனுப்பும்படி எழுதினுல் அனுப்புவோம். அவ்விடம் வந்து பணம்கட்டி பார்சல்களைப் பெற்றுக்கொள்ளலாம். இது மிகவும் சவுகரியமான ஏற்பாடு. அல்லது பாங்க் (Bank) மூலமாய் சரக்கு அனுப்பும்படி எழுதினுலும் அனுப்புவோம். உடனே பணத்தைக் கட்டி பார்சல்களைப் பெற்றுக் கொள்ளாத பக்ஷத்தில் சகலசெலவும் அவர்களைப் பொறுத்ததாகும்.

N. P. (a) ஜவுளி விலை விபரமடங்கிய காட்லாக் வேண்டுவோர் எமக்கு எழுதி இனமாக பெற்றுக்கொள்ளலாம்.

(b) எல்லா ஆடர்களும் எம்முடைய மேர்பார்வையின் பேரில அனுப்புவோம்.

தங்கள் ஆர்டரை எதிர் பார்க்கும்
மு. ரா. பெருமாள் ஐயர்,
சுதேச ஜவுளி வியாபாரம்,
மேலைக் கோபுரவீதி,
மதுரை.
(இந்தியா)

இப்பங்குனி உத்திர மகோற்சவத்துக்கு முன் வரும் வசந்தோற்சவம் சிருட்டியையும், நிருத்த தரிசனம் திதியையும், ரதோற்சவம் சங்காரத்தையும், மகாபிஷேகம் திரோபவத்தையும், உத்தரபாததரிசனம் அநுக்கிரகத்தையும் உணர்த்தலால் எல்லா உற்சவங்களினும் மகா விசிட்டமுடைத்தெனவறிக. இப்பங்குனிமாசத்து வசந்தோற்சவத்தில் அநுக்கிரகம் திரிபதார்த்தங்களையும் ஐபக்திரிபத வுணர்ந்த மகா ஞானிகளுக்கு மாத்திரம் உண்டாகும்.

நிகழ்ந்தபங்குனி யுத்திரநாளினிற் றேவதீர்த்தப் பொய்கை, மகிழ்ந்து மூழ்கியே யாடையாடகம் பசுமா நிலமுதற்றானம், புகழ்ந்த நான்முறைஞர்முன்னுத விஜய புத்திடங்கொண்டோரை, யகவேளான்பொடு போற்றினோர் முத்தியாவடைதல் சத்தியமம்மா,

முன்னாளிலே இப்பங்குனி உத்தர மகோற்சவம் பிறக்கமுத்திதருந்தலமாகிய இத்திருவாரூரிலே சூரியவம்பிசத்து அரசர்களாகிய சோழமகாராசர்களாலே செவ்வனே வேதவிவாகம விதிப்படி நடைபெற்றிருந்தது. பின்னர் அறுபத்துமூன்று நாயன்மார்களு ளொருவராகிய நமிநந்தியடிகளுநாயனாரால் அக்காலத் தரசுபுரிந்த சோழமகாராசாவினுடைய வேண்டுகோளின்வண்ணம் நிபந்தமமைத்து நடாத்தப்பெற்றது.

இதனை, "நாத மறையோர் நமிநந்தி யடிகளார் நற்றொண்டாகப், பூதநாதர் புற்றிடங்கொள் புனிதர்க்கமுதுபடிமுதலா, நீதிவளவன்றான் வேண்டு நிபந்தம பலவு மரியணையின், மீதிகழ விருந்தமைத்தான் வேதாகமநூல் விதிவிளக்க."

"வென்றிவிடையார் மதிச்சடையார் வீதிவிடங்கப் பெருமாடா, என்றுந் திருவாரூராளுமியல்பின் முறைமைத் திருவிளையாட்டொன்றுஞ் செயலும், பங்குனியுத்தரமாம் திருநாளுயர்சிறப்பும், நன்றுமிவணப்பஞ் செய்தபடி செய்தருளு நிலைபெற்றார்" எனவருஞ் செய்யுட்களாலும்,

"ஆராய்ந்தடித் தொண்டா னாணிப் பொன்னூராகத்தடக்கி, பாரூர் பரிச்சித்தம் பங்குனியுத்திரம் பாற்படுத்தா, னாரூர்நறுமலர் நாதனடித் தொண்டனம்பிநந்தி நீராற் றிருவிளக்கிட்டமை நீடறியுமன்றே."

எனனும் திருநாவுக்கரசு நாயனார் திருவிருத்தத்தாலு மறிக.

சிவபெருமான் நமிநந்தியடிகளுநாயனாருக்கு அத்திருவாரூரின்கண் வாழ்வார் தமமுடைய கணங்கள் எனபதனைக் காட்டுதல் அந்நாயனார் ஆங்குள்ள திருக்குள நீரை மொண்டு அகலிவிட்டுத் திருவிளக்கேற்றல் முதலாகிய திருவிளையாடல்கள் பலவற்றையும் அத்திருவாரூரின்கண்ணே செய்தருளினார். அவற்றை

"தெய்வப் பெருமா டிருவாரூர்ப் பிறந்துவாள்வாரெல்லாரும், மையணிந்தனைய மணிகண்டர் வடிவேயாகிப் பெருசொளியாய், மொய்யைத் தமைந்த மேனியராம பரிசுகண்டு முடிகுவித்த, கைவைத்தஞ்சி யவனிமிசை விழுந்து பணிந்து களிசிறந்தார."

"சோதிவிளக்கொன் றேந்துதலுஞ் சுடர்விட்டெழுந்தது நோக்கி, யாதிமுதலவராநெறியார் கோயிலடைய விளக்கேற்றி, யேதநினைக் தவருக்கந்த வெதிரே முதிருக் கவிப்பினுட, னுதனருளாற் றிருவிளக்கு நீராலெரித்தார் நாடறிய."

"பண்டுபோலப் பலநாளும் பயிலும் பணிசெய்தவரொழுக, தண்டியடிகளா லமணர் கலக்கம் விளைந்த சாரிலமண, குண்டரழிய வேழுலகுங் குலவும்பெருமை நிலவியதால், அண்டா பெருமான றொண்டர் கழலமரர் பணியு மணியாரூர்."

"வேத மறிக்கரத் தாரூ ரரற்கு விளக்கு நெய்யைத், தீதுசெறியமண் கையரட்டாவிடத் தெண்புனலா, லேத முறுக வருகவென நன்று விளக்கெரித்தா, ஞதமொழிமேலம் பேறு ரதிப னமிநந்தியே." திருத்தொண்டர்திருவந்தாதியாலும்,

இனி, இத்திருவாரூரின் விசிட்டத்தையும் அதன்கண் அமர்ந்த வீதிவிடங்கப்பெருமான் செய்தருளிய திருவிளையாடல்களையுங் கூறுவது இன்றியமையாததொன்றாகலான் அவற்றுட் சிலவற்றை கூறுதும்; திருவாரூரெனபது இலக்குமி அதன்கண் வீற்றிருந்து சிவபிரானைப் பூசிக்கப் பெற்றமையினால் வந்ததுமென அறிக. அது கமலாலயமென்றும் பூங்கமலாபுரி யென்றும் கந்தபுராணத்தின்கட் கூறப்படுதலானும்

"சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது, மன்னுமாமல ராள்வழி பட்டது, வன்னியாறு மதிபொதி செஞ்சடைச, சென்னியார் திருவாரூர்த் திருநகர்."

என்னும் பெரியபுராணச் செய்யுளாலும் பெறப்படும். இது விராட்புருடனுக்கு மூலாதாரஸ்தானமென்று கூறுதலை

"திருவளர் ராரூர் மூலந் திருவானைக் காவே நாபி, மருவளர் பொழில்சூழ் அண்ணா மலைமணி பூரகேசி, திருவருள் கண்டமென்ற மிதயமாந் திருக்காளத்தி, பொருவருங் கண்டமாகும புருவமத்தியமாங் காசி"

என்னுந் திருவிளையாடற் புராணச் செய்யுளானறிக.

துவாதசாந்தபுரமாகிய திருவாலவாயின்கண்ணே சோமசுந்தரக்கடவுள் அறுபத்துநான்கு திருவிளையாடல்களைச்செய்தருளியவண்ணமே மூலாதார ஸ்தானமாகிய இத்திருவாரூரின்கண்ணும் வீதிவிடங்கப்பெருமானாகிய தியாகராஜப்பெருமான் தமது அடியார்பொருட்டு முன்னூற்றறுபத்திநான்கு திருவிளையாடல்களைச் செய்தருளினார். அவற்றை வடமொழியினகணுள்ள தியாகராஜவிலாசத்திற் காண்க. இத்திருவாரூர் பிறக்கமுத்திதருந் தலமென்பதனை

"காசியி லிறக்க முத்தி கமலையிற் பிறக்க முத்தி, தேசுறு சிதம்பரத்தை தரிசிக்க முத்தியாகும், மாசிலா மேன்மை பூண்ட மறைசையம்பதியோ கூறில், ஆசறு தீர்த்தமாதனனி லாடவே யளிக்கு முத்தி"

என்னும் வேதாரணியபுராணச் செய்யுளானறிக.

இனி தண்டியடிகளுநாயனாரும் இத்தலத்தின் மேற்புறத்திலுள்ள திருக்குளத்தைக் கல்லிச் சமணர் செய்த இடுக்கணினின்றும் நீங்கச் சிவபெருமான் திருவருளால் கண்பெற்று அச்சமணர் கண்ணிழந்து போகும்வண்ணம் செய்து முத்தி பெற்றதும் இத்திருவாரூரின்கண்ணேயே.

"எய்த வடிமை சிவனுக் கியானென்னி லின்றென்கண் பெற்று, வேய்த வெனதிரே திருவாரூர் விரவுஞ் சமணர் கண்ணிழப்பார், ஆய்ந்த பொருளுஞ் சிவபதமே யாவதென்றே யஞ்செழுத்தை, வாய்ந்த தொண்ட ரெடுத்தோதி மணிநீர்வாவி மூழ்கினார்."

"தொழுது புனன்மே லெழுந்தொண்டர் தாமலர்க்கண் பெற்றெழுந்தார், பொழுது தெரியாவகையிமையோர் பொழிந்தார்செழுந்தண் பூமாரி; இழுதையமணர் விழிததே கண்ணிழந்து திகைத்தனகண்டு, பழுதுசெய் தவமண் கெட்டதென்று மன்னன் பகர்கின்றான்."

"கண்ணார் மணியென்னு மின்றக்கபெறு பிடித்தார்க்கு, தண்ணார் புனற்றடத் தொட்டலுந் தன்னை நகுமமணர், கண்ணுங் கிழப்ப வமணர் கலக்கங்கண் டம்மலர்க்கண், விண்ணு யகனிடைப் பெறறபிரா னூர் விறற்றண்டியே."

திருவாரூர்ப் பிறந்தார்கள் ளெல்லார்க்கு மடியேனென்று சுந்தரமூர்த்திநாயனாருளிச்செய்தமையானும் அறிக. அதனை

"திருக்கயிலை வீற்றிருந்த சிவபெருமான் திருக்கணத்தார், பெருக்கியசீர்த் திருவாரூர்ப் பிறந்தார்களாதலினால், தருக்கியவைம் பொறியடக்கி மற்றவர்தந் தாழ்வணங்க, வொருக்கிய நெஞ் சுடையவர்க்கே யணித்தாகு முயர்நெறியே."

"செல்வந்திகழ் திருவாரூர் மதில்வட்டத் துட்பிறந்தார், செல்வன் திருக்கணத் துள்ளவரே யதனுற்றிகழச், செல்வம் பெருகு தென்னாரூர்ப் பிறந்தவர் சேவடியே, செல்வ நெறியுறுவார்க் கணித்தாய செழுநெறியே."

என வருவனவற்றாற்காண்க.

விறன்மிண்டநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் அடியாரை வணங்காது ஒருபிராகாரம் ஒதுங்கிச் சென்றனர் என்று அடியாரை வணங்காத சுந்தரனும் அவனை வலித்து ஆட்கொண்ட தியாகேசரும் அவ்வடியார்களுக்குப் பிறகு என்று கூறியமையும், எந்நாள் இவ்வடியார்க்கு அடியானாகுநாள் என்று சிந்தித்துச் சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் காரணமெனவறிக.

பேசும்பெருமை யவ்வாரூரனையும்பிரானவனு, மீசன் றனையும் புறகுதட்டென்றவ னீதனுக்கே, தேசமெனக்கும் பிரான்மனைக்கே புக்கு தென்றல், வீசும்பொழிற் றிருச்செங் குன்றயூர் விறன்மிண்டனே.

இனி, சைவசமயாசாரியர்களி லொருவராகிய சுந்தரமூர்த்திநாயனாரும் பரவையாரை விவாகஞ் செய்து திருப்பதிகங்களைப்பாடி யோகபரம்பரையில் வைகியதும், திருத்தொண்டர்கண்மீது திருத்தொண்டத்தொகைபாடி அடியார்பெருமையை விளக்கியதும இத்திருவாரூரின்கண்ணேயே.

"தென்னவ னார்மன்னன் றேவர்பிரான் திருவருளால், மின்னுருவ கொடிமருங்குற் பரவையெனு மெல்லியலை, பொன்னனைய முலையோடு கதுபுனாகுவட்ட சார்வாகப், பன்னாளும் பயின்யோகப் பரம்பரையின் விரும்பினார்."

"தன்னையாளுடையபிரான் சரணாரவிந்தமலர், சென்னியிலுஞ் சிந்தையிலும மலர்வித்துத் திருப்பதிகம் பணையுந்தமிழ்த் தொடைமாலை பலசாத்திப், பரவையெனு மின்னிடையா ளுடன் கூடி விளையாடிச் செல்கின்றார்."

"தொலலைமால் வரைபயந்த தூயாடன் திருப்பாகர், அல்லறீர்த் துலகுய்ய மறையளித்த திருவாக்கால், தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேனென, றெல்லை யில்வண் புகழாளை யெடுத்திசைப்பா மொழிகென்றார்."

"தூரத்தே திருக்கூட்டம் பலமுறையாற் றொழுதணைபு, சேரத்தாழ்ந் தெழுந்தருகு சென்றேத்தி நின்றழியா, வீரத்தா ரெல்லார்க்குந் தனித்தனிவே றடியேனென், றாரத்தாற் றிருத்தொண்டத் தொகைப்பதிக மருள்செய்தார்."

எனவருஞ் செய்யுட்களானறிக.

பெரியபுராணத்திற்கூறிய மநுநீதிகண்டசோழமகாராசா தனதுடைய ஏக புத்திரனைத் தேர்க்காலிலிட்டுத் தேரைநடாத்திய செயற்கருஞ்செயலும இத்திருவாரூரின்கண்ணேயே நிகழ்ந்ததெனவறிக. அதனை,

"ஒருமைந்தன் றன்குலத்துக் குள்ளானென்பது முணரான், தருமந்தன் வழிச்செலவு கடனென்று தன்மைந்தன், மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன், அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான்."

"தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது, மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைபொழிந்தா, ரண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல், விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்"

எனவருஞ் செய்யுட்களானறிக.

## சோமாஸ்கந்தமூர்த்தி பூமிக்குவந்தவரலாறு.

"முன்னொருநாளிலே திருக்கைலாசமலையிலுள்ள சோலையிலே சிவபெருமானும் உமாதேவியாரும எல்லையிலாத மகிழ்ச்சியோடு வீற்றிருந்தார்கள். அங்குள்ள வில்வ மரங்களின் கிளைகளிலே முசுவின் கூட்டங்கள் தங்கின. அவற்றுள் முனிவர்களைப்போல முள்காத்திருக்கின்ற ஒரு ஆண்முசு அவர்களுவாமிதும அளவிறந்த வில்வபத்திரங்களைப பறித்துச் சொரிந்துகொண்டிருந்தது. அதனை உமாதேவியார் பொருளாய்ச் சிறிது சினஞ் செய்தார். அவருடைய செயலைச் சிவபெருமான பார்த்து, "சததியே இதுவே நமமை அருச்சனை செய்கின்ற இம்முசுவை நீ கோபிப்பதென்னை? இதனைத் தவிருதி" என்றார். என்னலும், உமையம்மையார் கோபமிலராகி அதற்கருள்புரிந்தார். கைலாசபதி அம்முசுக்கலையின் மனத்திலுள்ள அஞ்ஞானத்தைக் கெடுத்து மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்தருளினார். ஞானமுதிர்ச்சிபெற்ற முசுக்கலை விசுவையாச சினையினின்றும் விரைந்திறங்கி, மனாகிகி, பரமபிதா மாதாக்களாகிய பாதபங்கயங்களை அனேபோடு வணங்கி, "பொய்யடியேனுகிய தமியேன் செய்த பிழையைப் பொறுத்தருளும்" என்று பிரார்த்தித்தது. சிவபெருமான் அதனைக்கேட்டு, "நீ செய்த இதைப் பிழையென்று சொல்லற்க, சிறந்த வில்வபத்திரங்களைக்கொண்டு நம்மைப் பூசனை செய்தாய். அதனால் நீ மனுவமிசத்திற் பிறந்து உலகமுழுவதையும் அரசாள்வாய்" என்று அருள்புரிந்தார். முசு அத்திருவாக்கைக் கேட்டு, மிகுந்த துன்பத்தையடைந்து விம்மி இரங்கி, நடுங்கி எழுந்து, சிவபெருமானை வணங்கி நின்று, "எம்பெருமானே, அடியேன் உம்மை நாடோறும் தரிசனஞ் செய்துகொண்டு அழியாத பேரானந்தப் பெருஞ்செல்வத்தோடு இங்கேயிருத்தலை விட்டுப் பூமிக்குப்போய் அழியும் இயல்பினையுடைய அச்செல்வவலையில் அகப்படுவேனாயின், நீட்டு எவ்வாறு பிழைப்பேன்" என்றது. அதனை எம்பெருமான் கேட்டு, "முசுவே, உன்மனக்கிடக்கை நன்று! நீ இப்போது பூமிக்குப் போய் அரசாண்டிருந்து, பின்பு நம்மிடத்து வருதி. வருந்தி வேறொன்றையும் நினையாதே" என்று திருவாய் மலர்ந்தார் அப்பொழுது அம்முசுக்கலை "எம்பெருமானே, பொய்யை மறைத்த புலால்மயமாகிய இவ்வுடம்பைப் பேணி அம்மானுடப் பிறப்பிலே செய்வன தவிர்வன அறியாது மயங்காவண்ணம் இம்முசுவின் முகத்தோடு பிறக்கும்படி அடியேனுக்குத் திருவருள்புரியும்" என்று பிரார்த்தித்தது. சிவபெருமான் அவ்வரத்தை அதற்குக் கொடுத்தருளினார். அம்முசுக்கலை திருக்கைலாசமலையை நீங்கிப் பூமியிலே வந்து, அருவாய் குன்றச் செல்வங்கள் கருவகியும் அதனால் மிகுந்த துன்பத்தை அனுபவித்தும் சதநியத்தை நிலைபெறத்திப் பூமியை ஆண்ட அரிச்சந்திர மகாராஜனுக்கு ஓர் வழித் தோன்றலாய், முகமொன்று மாத்திரம் முசுவினுருவும் மற்றை அவயவங்களெல்லாம் மன்மதனிற் சிறந்த அழகுமுடையதாகிப் பிறந்து, முசுகுந்தன் என்னும் நாமத்தைப் பெற்றிருந்தது. இவ்வாறு பிறந்த முசுகுந்தன் சோழநாட்டிலுள்ள கருவூரி லிருந்துகொண்டு, முடிகுடிப் பூவுலகிலுள்ள எல்லாத் தேயங்களையும் தன்னுடைய தோளின்மேற் சுமந்து, சூரியனிருக்குமிடத்தில் ஓரிளம்பிறை இருந்தாற்போலச் சூாபன்மனுடைய ஆணையைக் கடக்கமாட்டாதவனுய் அவனுக்கஞ்சி யொழுகினான். அவனை சுப்பிரமணியக்கடவுள் சூரபன்மனைச் சங்கரித்ததைக் கேட்டுப் பழைய கவலை நீங்கி மிகுந்த வலியைப் பெற்று, தன்னரசுரிமையைச் சிறப்புற நடாத்தியிருந்தான்.

இப்படி முசுகுந்தச்சக்கிரவர்த்தி அரசுசெய்திருக்குங் காலத்தில், வலன் என்னும் அசுரன் பலபெருஞ் சேனைகளோடு சென்று விண்ணுலகத்தைச் சூழ்ந்து அடர்க்க, இந்திரன் சிலநாள் அவனோடு போர்செய்து, அவனை வெல்லமாட்டாதவனுய், "முசுகுந்தச்சக்கிரவர்த்தியை அழைத்துக் கொண்டுவருதி" என்று ஒரு தூதனை அனுப்பினான். அவன் பூமியில் வந்து இந்திரனுடைய பணியைச் சொல்லுதலும், முசுகுந்தன் அதனைக் கேட்டு, நன்றென்று, வீரவாகு முதலிய வீரர் கூட்டத்தோடும் சுவர்க்கவுலகத்திற் போய், இந்திரனை வணங்கி, தேவசேனாபதியாந் தலைமையைத் தாங்கி, அவுணசேனைகளெல்லாவற்றையும் அழித்தான். அவுணசேனைகள் அழிதலும், இந்திரன் சிலநாள் வலாசுரனோடு எதிர்த்து நின்று போர்செய்து, குலிசாயுதத்தினால் அவனைக் கொன்று, வெற்றியடைந்து, அக்காரணத்தால் வலாரியென்னும்பெயரைப்பெற்றான். வலாசுரனை வென்ற இந்திரன் முசுகுந்தச்சக்கிரவர்த்தியை அமராவதியிலுள்ள தன் கோயிலினுள் அழைத்துக்கொண்டு போய், அவனை நோக்கி, "மகாராசனே, என்பகைவர்களைத் தொலைத்து என்னை விண்ணுலக அரசனாக்கினாய்; வீரத்தையும் மேலாகிய புகழையுந்தந்து எனக்கு உற்றதுணைவனுமாயினாய்; இதனால் எனக்கு ஆந்தரங்கமாகிய சுற்றம் நீயல்லையோ!" என்று பல உபசாரங்களைச் சொல்லி, ஸ்நானஞ்செய்து, வஸ்திரந்தரித்து, விஷ்ணுவினாலே பூசிக்கப்பட்ட தியாகேசப்பெருமானை அருச்சனை செய்தான்.

சிவபெருமான், உமாதேவியாரும் சுப்பிரமணியக்கடவுளும் ஒருபக்கத்திலமகிழ்ச்சியோடுபொருந்தத் திருக்கைலாசமலையின்கண் வீற்றிருந்தல்போல அங்கேவீற்றிருத்தலும், அத்திருக்கைலாசபதியினிடத்திற் பயின்ற அன்பினாலும், இடைவிடாது ஒரு பொருளைக் குறிக்கொண்டு பாதுகாத்திருப்பவன் சிறிது அயர்ந்தால் கண்ணுறவியதுபோல முசு முகத்தை வாங்கியும் சிறிது மயங்கினவனுமாகிய முசுகுந்தன் அவரைக்கண்டு, பரவசப்பட்டு, தொழுது கூத்தாடி, திருவடிகளை முடிமேற் சூடி, உள்முருகித் துள்ளி, வேதங்களைப் பாடி, கைகளைக் கொட்டி, சொல்லமுடியாத ஆனந்தமுற்று, மெய்புழகித்து, உரைதடுமாறி, "முன்பு திருக்கைலாசமலையின்மீது திருபாதியாகிய சிவபெருமான வீற்றிருந்த இந்த அருமைத் திருக்கோலத்தைத் தரிசித்துத் தரிசித்து உள்ளத்தேநிறைந்த பெருமகிழ்வெய்தியிருந்த தமியேன் இம்மானுடப்பிறப்பினால் மயங்கி நெடுநாள் அவரை மறந்தேனல்லவோ" என்று கூறி, அவரை நோக்கி,

ஏகவஸ்துவே காத்தருளுக, எவர்க்குந்தலைவரே காத்தருளுக, உமாதேவிபாகரே காத்தருளுக, மேலாகிய பரஞ்சோதிவடிவே காத்தருளுக, நீலகண்டரே காத்தருளுக, இடபாரூடரே காத்தருளுக, தக்கன்வேள்வி தடிந்தவரே காத்தருளுக, பிரம விட்டுணுக்களாலறிதற்கரியவரே காத்தருளுக, விரும்பத்தக்கவரே காத்தருளுக, நமது தலைவரே காத்தருளுக, செம்பொன்னையும் இரத்தினத்தையும் நிகர்த்தவரே காத்தருளுக, சிவபெருமானே காத்தருளுக, திரிநேத்திரரே காத்தருளுக, நாகாபரணராகிய புனிதரே காத்தருளுக, பரிமள விபூதியணிந்த தலைவரே காத்தருளுக, யானைத்தோலைப் போர்த்தவரே காத்தருளுக, சங்கரரே பரமேஸ்வரரே காத்தருளுக, அந்நியவே காத்தருளுக, முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளே காத்தருளுக, உயிர்க்குயிரே காத்தருளுக, வேதமுடிவே காத்தருளுக, என்னை இந்தாலமே பூமியிலவிடுத்தவரே காத்தருளுக, தேவர்களுடைய வடிவைக்காட்டி யென்னை நினைப்பித்தவரே காத்தருளுக, யார் யாவர யாராயினும் வணங்கின் அவர்களிடமாகக்கொண்டு வணங்குபவர்க்கருள் புரிபவரே காத்தருளுக, மெஞ்ஞானத்தாலே வெளிப்படுவுணர்ந்தார்க்குத் தெய்வபோகத்தையும் மோக்ஷத்தையும், சிறப்புடனீபவரே காத்தருளுக, பிரமவிட்டுணுமுதலிய தேவர்களது பதங்களை யெமக்குக் கொடுக்கும்தற்பரரே யென்று எவரும் நம்பும் பொருட்டு வேதங்கள் சொல்லுதேவரீரை அடைந்தோர்க்கு எல்லாத்தேவர்களுடைய பதங்களையும் கொடுக்குஞ் சர்வலோக ஏகநாயகரே காத்தருளுக, தேவரெல்லாரும் பாதகமலங்களைமர்ந்து வேதமுணர்ந்த பெரியோர் வந்து வழிபட எழுந்தருளுபவரே காத்தருளுக, முப்பத்தாறு தத்துவங்கட்கும் மேலாகிய தலைவரே காத்தருளுக, காத்தருளுக, அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளுக என்று துதிப்ப.

இவ்வாறு முசுகுந்தச் சக்கிரவர்த்தி துதிப்ப; எம்பெருமான் கருணைசெய்து, அவனுடைய முகத்தை நோக்கி, "விட்டுணு அளவிலாத காலம நம்மை அன்போடு பூசித்து இந்திரனிடத்தில் வைத்தான். அரசனே, நீ நம்மைப் பூமியிற் கொண்டுபோய்ப் பூசைசெய்வாய்" என்று இந்திரன் கேளாவண்ணம் சொல்லியருளினார். முசுகுந்தன் மிக்க பெருமகிழ்ச்சியுற்று, "சுவாமி, உமமுடைய திருவுள்ளம இதுவாயின் அடியேன் உய்ந்தேன்" என்று ஆச்சரியமடைந்தான். இந்திரன் தன் சிவார்ச்சனையை முடித்து, பின் அக்கினி காரியத்தையும் பிறவற்றையும செய்து, வேறோர் கோயிலினுட்போய், முசுகுந்தனை அழைத்து முசுகுந்தனுக்கு விருந்து செய்வித்து, விசித்திர வஸ்திரங்களையும் ஆபரணங்களையும மணிகளையும் முத்துக்களையும் தெய்வப் படைக்கலங்களையும் பிறவற்றையும உதவி, "இவனும உனக்கு வேண்டியதைச சொல்லுதி" என்றான. முசுகுந்தன் "மகாராசனே, நீ பூசை செய்கின்ற கடவுளை யான் பூவுலகிற் கொண்டுபோய் வைத்துப் பூசித்தற்காக அன்போடு கொடுக்குதி" என்றான். இந்திரன் அவனுக்கு இவ்வாறு சொல்வான்:

"முசுகுந்தனே கேட்பாய், விட்டுணு புதல்வர்ப் பேறின்மையினால் முன்னாளிலே சிவபெருமானுடைய திருவடிகளே தஞ்சம் என்று சிந்தைசெய்து நெடுங்காலந் தவஞ்செய்தபொழுது, சிவபெருமான் பார்ப்பதியாருந் தாமுமாய்ப் பூதப்படைகள்சூழ வெளிப்பட்டார். விட்டுணு தவத்தைவிடுத்து விரைவிலெழுந்து துதித்து வணங்கி நிற்ப; சிவபெருமான் மகிழ்ந்து அருள் செய்து, 'நீ நெடுங்காலம நம்மை நோக்கித் தவஞ்செய்து நின்றாய்; வேண்டியவரம் யாதுசொல்லுதி' என்று வினாவினார். விட்டுணு 'எம்பெருமானே அடியேனுக்கு அழியாத ஆயுளையும் சாதத்தொழிலையும் சித்தியோடிருக்கிற பெருஞ் செல்வத்தையும் ஈந்தருளினீர்; புதல்வர்ப்பேறில்லாமல வருந்தினேன்; இனி அதனையும தமியேனுக்கு ஈந்தருளும்' என்று வேண்டினார். சிவபெருமான நன்றென்று, திருப்புன்முறுவலசெய்து, 'உனக்கொரு புத்திரனை உதவினோம்' என்றருள்புரிந்தார். விட்டுணு உமாதேவியாரைத் தமக்குத்தடையென்று எண்ணியோ, சிவபெருமானுக்கு இவளும நம்மைப்போல ஒரு சத்தியென்றெண்ணியோ, மலைமகளென வெண்ணியோ அறியேம், முன்செய்த வினையினால் அவரைச சிறிதும அன்புசெய்து வணங்கித் துதித்திலர். [ஐம்புலன்களையும ஒருவழிப்படுத்தி, ஆசையைப் பற்றறக் களைந்து, இறக்கவரினும் தம நிலைமை திரியாத உண்மையையே கடைப்பிடித்து, உலகமாதாவாகிய எம்பெருமாட்டியை நீக்கி எம்பெருமானையே வழிபடும் இயற்கை பிருங்கி முனிவர் ஒருவருக்கன்றி ஏனையோர்களான முடியுமோ முடியா.] அப்பொழுது எம்பெருமாட்டியார் விட்டுணுவை நோக்கி, 'நீ இங்கே என்னை அவமதித்தாய், ஆதலால் எம்பெருமானிடத்து மதன்புடையையல்லை. நீ பெறுகின்ற புத்திரனும் எம்பெருமானுடைய முனிவினால் விரைவில் அழிக' என்று சாபத்தைக் கூறி, சிவபெருமானை நோக்கி, 'பரப்பிரமமும் யானே யல்லதில்லை யென்று அறிவில்லாத மானுடப் பசுக்களை மருட்டித் திரிகின்ற கள்வனாகிய இவனுக்கு முன், ஞானிகளுடைய அறிவினாலன்றி அணுகுதற்கரிய நீர் அணுகி நிற்கலாமா? உயிர்க்குயிராகிய கடவுளே, மீண்டு செல்வோம் வருக' என்று கூறி எம்பெருமானை அழைத்துக் கொண்டு போயினர்.

விட்டுணு அதனைக்கண்டு, துன்பமுற்றுத் தஞ்சி அயர்ந்து மனந்தடுமாறி, மெய்சோர்ந்து தளர்ந்து, பலபொருள்களை யேற்றிய மரக்கலத்தைச் சமுத்திரத்தின் கரைக் கண்டாய்க் கவிழ்த்த ஒரு வணிகனைப்போல வருந்தி, 'உமாதேவியார் பொருட்டால் இங்கே இந்த இடையூறு வந்தது' என்று உன்னி, சிவபெருமானையும உமாதேவியாரையும் குமாரக்கடவுளையும ஒரு திருவுருவாக அமைத்து, வேதாகம விதிப்படி மெய்யன்பினுற் பூசைசெய்து, பின்னும் வருந்திப் பலவாயிரகோடி வருஷம தவமியற்றினார். முனிவர்கள் அதனைக்கண்டு 'இன்னமுஞ் சிவபெருமான் வருகின்றிலர்; இனித் தவஞ்செய்பவர் இல்லை' என்றார்கள். அப்பொழுது, சத்தியுஞ் சிவமுமாய் உலகங்களையெல்லாந் தந்த உமாதேவியாரும சிவபெருமானும வெளிப்பட்டுவருதலும், விட்டுணு மனமகிழ்ந்து, ஓடிப்போய், முன்னே அம்மையாருடைய திருவடிகளில் வணங்கி, பின் எம்பெருமானுடைய பாதங்களை வணங்கி, அவ்விருவருடைய புகழ்களையும் வேதவசனங்களாலே துதித்தார். சிவபெருமான் அவருக்கு நலமருள் புரிந்து 'உமையே நீ இவனுக்கு அருள்செய்' என்றுகூற, அவர் விட்டுணுவை நோக்கி, 'முன்னே எம்பெருமான் உனக்குத் தந்த வரமும யான் முனிந்து கூறிய சாபமும பிழைபடமாட்டா; இனி யார்தாம அவற்றை மாற்றவல்லார்! உன்மகன் எம்பெருமானுடைய நெற்றிக்கண்ணின் அக்கினியினாலிறந்து, பின்னர் முன்புபோலத் தோன்றி, உயிரோடு இருக்குக' என்று கூறினார். சிவபெருமானும் 'அவ்வாறாகுக' என்றருளி, உமாதேவியாரோடு மறைந்தார். விட்டுணு ஆச்சரியமுற்று, தமது பதிக்குப்போய் வீற்றிருப்ப; சரிய நிறத்தையுடைய மன்மதன் அவருடையமைந்தனாய்த் தோன்றி, அழகிற் சிறந்த வாலிபனாய், பூம்பாணங்களையும் கருப்பு வில்லையும் கையிலேந்தி, ஆடவர்களும் பெண்களும் இன்பத்தின் மேல மனம வைக்கும்படி போர்புரிந்து உலாவினான். அவன் ஒருநாள் முதற் கடவுளாகிய சிவபெருமான மீது பூம்பாணங்களைச் சிதறி, அவருடைய நெற்றிக் கண்ணினாற் பொடிபட்டு, பின் அவர் அருளால் அருவும் உருவும் அடைந்து, முன்னே தனக்குள்ள வலியோடு இருந்தான். உமாதேவியாருடைய திருவாக்குத் தவறுமோ! இந்தச் சரித்திரம இவ்வளவிலிருக்க. (வரும்)

இங்ஙனம்,
ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளை,
தமிழ்ப்பண்டிதர்.

## "ஊழும் முயற்சியும்."

அழாவது இருவினைப்பயனுகிய இன்பதுன்பமென செய்தவினை சென்றடைதற் கேதுவாகிய நியதி. பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஊழ் என்பதை உணர்த்தும் ஒரு பொருட் சொற்கள். இது பரிமேழகர் உரைக்கருத்து. முயற்சியாவது ஊழ்க்குக் காரணமாகிய இருவினை இன்ப துன்பங்களை அநுபவிக்குங்கால் உடனிகழ்வதாகிய மெய் முயற்சி. இது வைதிகதார் சாஸ்திரத்தின் உண்மை. ஒருவன் எடுத்த பிறவிக்கணில் இருவினை இன்பதுன்பத்தை அநுபவிக்குங்கால் செய்த முயற்சியே அப்பிறவியில் ஆகாமிய வினையாகி விளைவுற்று அடுத்தபிறவிக்கண்சென்று புசிப்பாகும்பொழுது பிராரத்துவம் எனப்படும். புசிப்பாகாது எஞ்சியது சஞ்சிதமெனப்படும். ஒருவன் வயலிலே உழுதல் முதலாகிய மெய் முயற்சிகளைச் செய்து நெல்லை விதைத்து, நீர்ப் பாய்ச்சி வளர்த்துவருகின்றான். அக்கெற்பயிர் விளைந்து கதிரீன்று முற்றி விளைவாகின்றது. பின் கதிரை அறுத்துப் போர் தடுக்கி மிதித்துச் செந்நெற் குவையை எடுக்கின்றான். எடுத்து வீடுசேர்த்து மறுமுறைக்கு விதைத்தற்கு விதைநெல்லாகக் கொஞ்சத்தைச் சேமிக்கின்றான். அதுபோல ஆகாமிய பிராரத்துவ சஞ்சிதங்களிருக்கின்றன. மெய்ம் முயற்சியால் வயல் உழுது நெல்விதைத்து நீர்ப் பாய்ச்சிப் பாதுகாத்தல், ஆகாமியவினையை ஒத்திருக்கின்றது. விளைந்த நெல்லில் மறுவருட விதைக்காகச் சேமித்து வைத்தல், சஞ்சிதத்தை ஒத்திருக்கின்றது. வருட முழுவதும் புசிப்புக்குச் சேமித்து வைத்த நெல்லுக் குவை நாள்தோறும் புசிக்கும் பிராரத்துவத்தை ஒத்திருக்கின்றது. நாள்தோறும் புசித்தற்கென்று கட்டிவைத்த நெல்லு, கூடைக்குள் இருந்தபடியேயிருந்து ஒருவனுக்குப் புசிப்புக்கு வராது. பின் அதை எடுத்துக் குத்தி அரிசியாக்கி உலைப்பெய்து சமைத்துப் பின் கலத்திலிட்டுக் கையினற் பிசைந்து வாயிற்போட்டு பல்லினல் மென்று சாப்பிட்டாலன்றி வயிற்றுளிறங்கிப் போசனமாகாது. அதுபோலச் சென்ற வினையின் பயனுய் பிராரத்தம் காடோறும் அளந்து வைக்கப்பட்டு இருந்தாலும் அதனை முயற்சித்துணையாகவே உண்ணவேண்டும். இதுபற்றியே எடுத்த உடம்பில் வரக்கடவனவாகிய செல்வம், வறுமை, உயர்வு, இழிவு, இன்பம், துன்பம் என்ற ஆறு உடம்பு எடுப்பதற்குமுன்னே சூக்குமமாய்க் கருவினுள்ளமைந்துகிடந்தனவாம். அன்றி அப்போதப்போது, உளவாவன அல்ல. முன் கருவட் கிடந்த அவை பின்னர் அவற்றை அநுபவித்தற்குத் துணையாக உண்டான முயற்சி அநுபவிக்கச் செய்தலோ டொழியாது, மற்றோருடம்பிற் பொருந்துவதான அவ்வூழைக்கும் வித்தாகும். முற்பிறவியிற்செய்த முயற்சி இப் பிறவியில் வரும் இன்பதுன்பங்கட்கு ஏதுவாயினுற்போல இப்பிறவியிற் செய்யும் முயற்சி மேல்வினைக்கு வித்தாகும் என்ற இவைமெல்லாம் [illegible] முயற்சியினலும் [illegible] விளக்கிய ஆசிரியர் சிவஞான யோகிகள் சிவஞான சித்தியார் என்று உலகம் போற்றுஞ் செந்தமிழ் உபநிடதத்து இரண்டாஞ்சூத்திர இரண்டாமதிகாரம் ஒன்பதாந் திருவிருத்தத்து உரைத்தருளினர்.

"பேறிழ வின்பமோடு பிணிமூப்புச் சாக்காடு என்னுமாறு முன்கருவுட் பட்ட" என்னும் முதலையுடைய ஒன்பதாவது திருவிருத்தந் தொடங்கி அடுத்துவருந் திருவிருத்தங்களிலும் ஊழும் முயற்சியும் என்பதில் வருந் தடை விடைகளை எளிதிலுணருமாறு விரிக்கின்றார். ஆண்டுக் காண்க. "அனைத்துநாத்தா நகர்ந்துமே நுகர்வுமாகியே நிகழ்த்திவை பனவமுக்கால" எனத் திருப்பெருந்துறைக்கண் ஞானசாரியராய் எழுந்தருளி வந்தபெருமான் மணிவாசகப்பெருமானுக்குத் திருவாய்மலர்ந்தருளினர். முன் முயற்சியால் நீ எடுத்த பிறப்பின்கண் செய்து பக்குவப்பட்டு பிராரத்தமாயிருந்த இருவினைப்பயனை நாம் நியதிதவறாது அளந்துதர அவற்றை உண்டு உண்ணுங்கால் முயற்சித் துணையாக மேல்வினையுஞ் செய்தாய் என்பது அதன் பொருள். எம்பந்தம் நீக்க எழுந்தருளிவந்த எங்கள் சம்பந்தப் பெருமானும் தாம் அருளிய தேவாரத்தில்

"அவ்வினைக் கிவ்வினையா மென்றுசொல்லு மஃதறிவீ,ருய்வினை நாடா திருப்பதுமுந் தமக்கூனமன்றே, கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுது நாமடியோஞ், செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறு திருநீலகண்டம்."

என்று திருவாய்மலர்ந்தருளினர். இன்னும் மனிதன் சர்வசுதந்திர முள்ளவனென்றும், அவன் செய்யுங் காரியங்கள் நல்லன கெட்டன என்பனவற்றைச் சாஸ்திரங்களைக்கொண்டு தன் புத்தியால் நிச்சயித்து அதன்படியே பொழுதுக்கடமைப்பட்டிருக்கின்றானென்றும், அவ்வணமறியாமற் றீவினைகளைச் செய்வதனு லுண்டாம் பயனை அவனேயடைதற் குரியனென்றும், "ஸாட்சஷி சேதா, கேவலோ நிர்குணச்ச" என்னுஞ் சுருதிவாக்கின்படி ஈஸ்வரன் யாதொரு காரணமுமின்றி ஜீவர்களது செய்கையைப் பார்த்துக்கொண்டு சாட்சியாய்மட்டு முள்ளானேயல்லது அவனுக்கு வேறுசம்பந்தமில்லையென்றுந் தெளிவாய் நாம் ஊகித்தறியலாம். ஆகவே ஈஸ்வரன் துக்கத்தைத் தந்தான், சுகத்தைத் தந்தான் என்பது முதலிய அபிப்பிராயந் தவறானவையே. மனிதனுக்குச் சுகதுக்கா நியனுபவங்கள் தன்னுடைய பூர்வசன்மத்தின் பலனுகவுண்டாகின்றனவன்றி இறைவன் அவ்வனுபவங்களை யளிக்கிறானென்பதில்லை. மனிதனுடைய முயற்சியினலேயே கர்மநியமைதற்குரிய னென்பதே சாஸ்திரங்களினுண்மை. அதுபற்றியன்றோ நாலடியாரிலும்

"தன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை நிலைகலக்கிக் கீழிடுவானு நிலையினும் மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத் தலையாகச் செய்வானுந் தான்."

என்று கூறப்பட்டுள்ளது. கருமமில்லாமற்போனால் தெய்வம் எப்படியிருக்கும்? எப்படித்தான் பலனைக் கொடுக்குமென்றால், சஞ்சித கருமத்துக்கு இருப்பில்லையென்பது கருத்து. மனிதன் தனக்குத்தானே பந்து, தனக்குத்தானே சத்துரு,

தபம், நியமம் இவற்றோடு கூடினவர்களாயும் கடினவிரத முள்ளவர்களாயுமிருந்த முனிவர்கள் செய்தபலத்தாலோ சாபத்தைக் கொடுக்கிறார்கள்? இல்லை, ஆனால் தபம் நியமம் முதலிய கருமபலத்தாற்றான், உலகத்தின் எந்த மனிதன் பிறவுயிர்களைத் துன்புறுத்தி பாவத்தை தேடிக்கொள்கின்றானே, அவனையும் லோபமோகங்களையுடைய மனிதனையும், தெய்வம் ரக்ஷிப்பதில்லை. அக்கினியானது அற்பமாயிருந்தாலும், காற்றுவசப்பட்டால் எவ்வாறு விருத்தியடைகின்றதோ அதுபோல சஞ்சிதகருமமாகிற தெய்வமானது புருஷப் பிரயத்தனத்தோடு சேர்ந்து, நன்றாய் விருத்தியடைகின்றது. எண்ணெயில்லாதுபோனால் தீபமானது எவ்வாறு குன்றுமோ அவ்வாறே மனிதன் முயற்சியின்மையின் கருமமானது குன்றும். இவ்வுலகத்தில் தெய்வமானது கருமபலனையன்றி வேறுவிதமான பலனை உடையதாகவேனும் விரோதமான பலனை அளிப்பதாகவேனும் செய்கிறதில்லை. தெய்வமானது இவ்விஷயத்தில் பிரபுவாகிறதுமில்லை இவ்வாறே மகாபுராணம் உடைக்கத்திய யத்தமுக்கிய ஜன்மங்களில் அடைக்கிருக்கு நேசத்தினாலே சம்பாதிக்கப்பட்ட தன்னுடைய கருமமே தெய்வமென்ற பெயருடையதென்றறி. ஆகையால் இவ்வுலகத்தில் புருஷப் பிரயத்தனம் சிரேஷ்டமானதென்றறி என்று கூறப்பட்டிருத்தலோடு பகவத்கீதையிலும் ஆறும் அத்தியாயத்தில் ஒவ்வொருவனுந் தன்னாலே தன்னைக் கரையேற்றிக்கொள்ளவேண்டியது. தன்னைக் கெடுத்துக்கொள்ளலாகாது. ஏனென்றால், தனக்குத் தானே பந்து, தனக்குத் தானே சத்துரு என்று கூறப்பட்டிருக்கின்றது.

இக்கருத்துக்களை உட்கொண்டே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனரும் தமது அருமைத் திருக்குறளில் தெய்வமாகிய ஊழை உணர்த்தஓர் அதிகாரமும், முயற்சியின் வலியை உணர்த்த ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை என நான்கு அருமையான அதிகாரங்களையும் அடுத்தடுத்து அமைத்தருளினர். (தொடரும்)

இங்ஙனம்,
க. சரவணமுத்து,
நவாலி வடக்கு.

## விளம்பரம்.

"நடர்னைசை யென்னுங் கட்டளைப்பத்திரம்".

வதுளைடிஸ்திறிக்கோட்டில்
தெஸ்தமேந்து வழக்கு } நம்பர் B. 569.

அளுவமுல்லையைச்சேர்ந்த களுபகலைதோட்டத்திலிருந்து மாண்டுபோன லெச்சிமன் எட் கங்காணியுடைய சொத்தைப்பற்றி களுபக[illegible] தோட்டத்திலிருக்கும் [illegible]
பெத்திசக்கார[illegible]

களுபகலைதோட்டத்திலிருக்கும் வயதால் கீழ்ப்பட்ட முக்கம்மாவுடைய காவற்தத்துவகாறனுகிய வைத்தியபிள்ளை,

உத்தரவாதி.

இந்தக்காரியம் ஒழுங்குபடுத்துவதற்காக வதுளைப்பகுதி நீதவானுகிய ஜோன்றெட்லி வால்ஹவுஸ்துரையும் மேற்சொல்லிய பெட்டிசக்காறனுடைய பிறக்றாகிய T. P. வற்றல்மியூஸ்துரையுமாகிய இவர்கள் முன்பாகவந்து பெட்டிசக்காறனுடைய 1919-ம் ஆ மாசிமீ 5-ந் தேதியைக் கொண்ட சத்தியக்கடுதாசியை வாசித்துப்பார்த்து மரணித்துப்போன மேற்காணப்படும்பெயருடையவர்களுடைய சொத்துக்குமேற்காணப்படும் பெட்டிசக்காறி மேற்படி இறந்துபோனவருடைய கைம்பெண்சாதியாயிருப்பதால் மேற்படி உத்தரவாதி அல்லது இன்னும்யாராவது ஒருவர் அல்லது பலபேர் 1919-ம் ஆ பங்குனிமீ 19-ந் தேதி இக்கோட்டு முன்பாகவந்து தெரிபட்டு இத்தக்கோட்டுக்கு ஒப்புக்கொள்ளும் பொருட்டு போதிய நியாயங் காண்பிக்காதவரையில் மேற்படி பெட்டிசக்காறியை பூதலத்துக்காரியாக ஏற்படுத்தி தத்துவக்கடுதாசிகொடுக்கப்படும்.

J. R. வால்டர்ஸ்,
டிஸ்திறிக்ட்நீதிபதி.

## நன்றிகள்.

தற்கால காரீகத்திற்கேற்ற சகலவிதமான நகைகளும் சுப்பிடத்திற் பெற்றப்பாலன. திறமான சுயமிய விற்பனையாற் செய்யப்படுகின்றன. இன்னும் வேண்டியமாதிரியாகச் செய்து கொடுக்கப்படும். எவ்விதமான ஆடர்களும் மிகவும் கவனிக்கப்படும். சிறப்பிற்காத்திறகு நாம் பொறுப்பாளிகளாக நிற்கின்றோம். விருப்பமானவர்கள் எங்கள்பிரிவுகளில் ஆருக்காயினும் தெரிவிக்கவும்.

J. H இராஜையாவின் மனைவி
அல்லது, E. இராமலிங்கம்,
43-நதில்ஸ்ரீட், கொழும்பு

## JAFFNA CO OPERATIVE STORES LTD.
## யாழ்ப்பாண ஐக்கியவியாபாரசங்கம்.

இச்சங்கம், கொம்பனிக் கட்டளைச்சட்டப்பிரகாரம் பதிவுசெய்யப்பட்டது.

ஒருபங்கு நூறு ரூபாயுள்ள ஆயிரம் பங்குகள் கொண்ட ஒரு லட்சம் ரூபா முதலுள்ளது.

சங்கத்தின் நோக்கம்: அரிசி, நெல், புடைவை, காய், தானிய முதலிய பல சாமான்களிலும் வியாபாரம் நடத்தல்.

1918-ம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 26-ந் திகதிக்குச் சரியாய் நிகழும் காலயுத்தி வருஷம் ஆவணி மீ கoஉ திங்கட்கிழமை காலமே சூரியோதயத்தில் நிகழ்ந்த சுப முகூர்த்தத்திலே வியாபாரத் தொழில் தொடங்கிக் கிரமமாக நடைபெற்றுவருகின்றது. இன்னும் 500 பங்குகள் விற்பனவுக்கிருக்கின்றன. விரும்பியவர்கள் சங்கத்தின் லேககருக்கு மனு அனுப்பும்படி கேட்கப்படுகிறார்கள்.

M. Asaipillai,
லேககர்,
J. C. S. Ltd.

## கோவர்ஜான் இமிடேஷன் பட்டுப் புடைவை.



இந்த இமிடேஷன் பட்டுப் புடைவையானது நாணயமான முந்தானியும், மாங்காய்கள் போட்டு நேர்த்தியான உறுதிக் கரை கட்டி வெகு நன்றாயிருக்கும். மிக உபயோகமுள்ளவை. பளபளப்போடு நெசவுசெய்யப்பட்டது. இதில் ரோஸ், பச்சை, சிகப்பு, நீலம், மேக வர்ணம் [illegible] முதலிய நமூனகளு முண்டு. 16 முழ நீளமும், 2½ முழ அகலமுமுள்ள கோவர்ஜான் பட்டுப் புடைவை ஒன்றுக்கு 5-8-0. ஒரே முறையில் மூன்று சேலை வாங்குவோருக்கு வி.பி. சார்ஸ் கிடையாது.

சாவித்திரி சரிகைப் புடைவை.

16 முழ நீளம் 2½ முழ அகலம் சாதா பட்டுக் கலந்த முந்தானியுமுள்ள புடைவை ஒன்றுக்கு விலை ரூபா 7-0-0.

16 முழ நீளம் 2½ முழ அகலம் இரட்டை முந்தானி சிகப்பு பட்டுக்கரையுமுள்ள பெங்களூர்ச் சேலை ஒன்றுக்கு விலை ரூபா 9-0-0.

பந்தர் தவனக்கோடிச் சேலை.

16 முழமுள்ள தவனக்கொடி போட்ட சேலை ஒன்றுக்கு விலை ரூபா 4-8-0.

பாலாமணி மாங்காய்ச் சேலை.

16 முழமுள்ள வெள்ளைமல் துணியில் மாங்காய் போட்டசேலை ஒன்றுக்கு விலை ரூ. 3-12-0.

வேண்டுவோர்

சி. சுந்தரலிங்கம் அன் கம்பெனி,
2. ராமானுஜ ஐயர் தெரு,
சௌகார்பேட்டை, மதராஸ்.

## இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாளப்படும் மருந்துகளின் விபரம்.

1. கேர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.

இது கெர்ப்பஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்ப உற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அக்ரோகங்களை மாற்றிக் கெர்ப்பந்தரிக்கச்செய்யுமென்பது நிண்ணம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா ச.

2. தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.

இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூ உ, அணா அ.

3 பிரமேக வியாதிக்குச் சந்துச்சேந்தூரம்.

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினுல் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா உ.

4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.

சரீரத்தின்எந்தஇடத்திலும் ஓடிக்குத்தும்வாய்வுகளுக்கும் மற்றைஎவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தேகாண்டீபம், ஐந்துநிமிஷத்திற் குணமாகும்.

கச மாத்திரை புட்டி ஒன்று ரூ க, அணா அ.

5. மேகசஞ்சீவிச் சூரணம்.

மேகரோகமுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். உஉ நாள் மருந்து ரூ உ.

6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.

அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஔஷதம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூ க, அணா அ.

7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும்.

உஉ நாள் மருந்து ரூ உ.

8. மூலிகை ரத்தினத் தைலம்.

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாவிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜிலுஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒரு வாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ 1.

9. பரிமள பற்பொடி.

பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப்போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.

டப்பி 1 க்கு ரூ 0-4-0 டஜன் 0 க்கு ரூ 2-12-0.

10. படர்மேக சங்காரி வெண்ணெய்.

மேகரோகத்தால் தேகத்தில்விழும் எவ்வித படைகளையும் கவேளையிற் குணமாக்கும்.

டப்பி க-க்கு அணா ச, டஜன் க-க்கு ரூ உ, அ. அ.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

தவறுதீர்கள்! இதுசமயம்!! தவறுதீர்கள்!!
உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(க) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள், இல்லாவிடில் இதைப் பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினுல் இன்னின்ன காலத்தில் இன்னவைதக்குள் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கடிதம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்னவிதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(உ) க. ஆயுட்பாகம், உ. எந்தவிதத்தினுல் தனங்கிடைக்கும், ந. கல்யாணம் சொந்தமா, ச. களத்திரபாகம் எத்தனை, ரு. அது முன்னு பின்னு, சு. புத்திரனுண்டா, எ. தனம் வைத்துப் போவேனு, அ. மரணமாகுமிடம் சுயதேசமா, கூ. சொந்தவீடு நிலம் கிட்டுமா, க0. கடன் எப்போது நிவிர்த்தியாகும், கக. விவகாரம ஜெயமாகுமா, கஉ. நினைத்தகாரியம முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ க.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.
கஉ பாகம் சார்ஜ் ரூ ௫.

பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்டில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம எழுதினுல் ஜோதிஷ, வைத்திய "கேட்லாக்" இனுமாக அனுப்புவோம.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம்,வைத்தியம்,
மேலைச் சித்திரவீதி.
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

## காசிப் பட்டுப் பீதாம்பரங்கள்.

சுத்தமான பட்டு] சகாய விலைகள் [நாணயமான ஜரிகை

பிரியமில்லாததைத் திருப்பிப் பெற்றுக் கொள்ளுவோம்,
கீழே கண்ட பட்டுத்தினுசுகள் எல்லா நிறத்திலும் கிடைக்கும்.

பட்டுச்சேலைகள்:—16 முழம் நீளம் 2½ அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலைகள் உடல் சாதா விலை ரூபா 20முதல 50 வரை. அதேமாதிரி சேலை உடலினும் ஜரிகைப்பூ புட்டா போட்டது. ரூபா 20 முதல் 100 வரை.

ரவிக்கை:—விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலைகள் உடல் சாதா 2 ரூபா முதல் 8 வரை உடலினும்; புட்டா ஜரிகை பூவேலைசெய்தது. ரூபா 3-முதல் 20 வரை.

துப்பாட்டாக்கள்:—6-முழம் 2½- அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலை; உடல் சாதா ரூபா 8 முதல் 25 வரை. அதேமாதிரி உடலில் ஜரிகை வேலைகள் ரூபா 4 முதல் 55 வரை.

சவுக்கங்கள்:—2½ முழம் நீளம் 2½ அகலம் சுற்றி ஜரிகை மூலையில் மாங்காய் ரூபா 6-8-0 முதல் 15 வரை. அதேமாதிரி உடலில் பூக்கள் போட்டது. ரூபா 9-முதல் 30-வரை.

வெண்பட்டு வேஷ்டிகள்:—6, 7, 8, 9-முழம் நீளம் 2½, 2¾, 3-முழம் அகலம். சுத்த வெண் பட்டு கோயமுத்தூர் வேஷ்டிமாதிரி சிகப்பு சன்ன கம்பி போட்டது. விலை ரூபா 8½ முதல் 20-வரை. அதேமாதிரி வேஷ்டிகள் சிகப்பு சன்ன கம்பிக்குப் பதிலாக ஜரிகையால் சன்னக் கம்பி போட்டது. ரூபா 12-முதல் 30-வரை.

டை சவுக்கங்கள் 2½ × 2½-முதல் சிகப்புக் கம்பிக் கரை போட்டது. ரூபா 5-முதல் 8-வரை. ஜரிகைக்கம்பி போட்டது ரூபா 9-முதல் 15-வரை, டை வெண்பட்டு வேஷ்டிகள் ருத்திராட்சக் கரை போட்டதும் அதே விலைக்குக் கிடைக்கும்.

சுத்தமான கம்பளி போர்வைகள்:—6-முழம் நீளம் 3-அகலம் எல்லா நிறத்திலும் ரூபா 5-8 முதல் 8-வரை.

உருத்திராக்ஷங்கள்:—6 முகம் 33 உள்ள மாலை அணா 8 முதல் ரூபா 5 வரை; 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16-முகம் தனி மணிகள் ரூபா 5 முதல் ரூபா 25 வரை; 108-கொண்ட ஜெபமாலை அணா ஆறு முதல் ரூபா 5 வரை.

வயிரவா காசிக் கயிறு:—1-ம் கெ. 100-க்கு ரூபா 3. 2-ம் கெ. ரூபா 2-8-0, 3-ம் கெ. ரூபா 2. டை சிறிது 6-அணா. அதிலும் சிறிது 4-அணா.

பெண் குழந்தைகள் விளையாடும் பித்தளை பாத்திரங்கள் செட்டு:—பித்தளை, வெண்கலந்தாம் செம்பு, குடம், காண்டி முதலிய 27-சாமான்கள் அடங்கியது. சிறிது ரூபா 2. பெரிது ரூபா 4. கயம் கஸ்தூரி:—தோலா -க்கு ரூபா 35.

Silk Pitamber Co., Benares City.
விலாசம்:—மானேஜர், பட்டு பீதாம்பரக் கம்பெனி, காசி.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprietors at the SaivaPrakasa Press, Jaffna.